St. Joseph's Journal of Humanities and Science (Volume 3 Issue 1 January 2016) 34-36

St. Joseph's Journal of Humanities and Science

ISSN: 2347-5331

http://sjctnc.edu.in/6107-2/




# திருக்குறள் உணர்த்தும் வாழ்வியல்

- அ. மதலேன் *

## முன்னுரை

தமிழ் மொழிக்கு வலிமை சேர்த்த ஒரே நூல் தமிழருக்கு வாழ்வியல் உண்மைகளை உணர்த்தும் ஒரே நூல் வள்ளுவரின் குறள். திருக்குறளுக்கு நிகரான நூல் எதுவுமே இல்லை. அதற்கு அதுவே நிகர்! திருவள்ளுவர் வாழ்க்கையின் உண்மைகளை ஆராய்ந்துள்ளார் வாழ்க்கையின் அடிப்படையாகவும் பொதுவாகவும் உள்ள உண்மைகளைக் கண்டு எழுதியுள்ளமையால் பல்வேறு காலத்தவரும் அவற்றைப் போற்ற முடிகின்றது. ஒவ்வொரு சாராரும் தம் தம் துறைக்கு ஏற்ற கருத்துக்களை இதில் காணலாம். அவை இன்றைய வாழ்க்கைக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வாய்மையும் வள்ளுவமும்

அறங்களில் சிறந்தது வாய்மையாகும். அறத்தை வாழ்வில் கடைபிடித்து வாழ்வது என்பது எளிதன்று. சத்தியத்தை உயிராகக் கொண்டு வாழ்ந்தவன் அரிச்சந்திரன். அவனுடைய வாழ்வில் பல துன்பங்கள், எண்ணற்ற துயரங்கள் அத்தனையும் மீறி வென்றான் அவன். வரலாற்றில் இன்றுவரை நிலைத்து நிற்கின்றான். எல்லா தடைகளையும் மீறி, ஓர் அறத்தை எவன் வாழ்வில் கடைப்பிடிக்கின்றானோ அவன் உலக வரலாற்றில் நிலைபெற்று விடுகிறான்.

வாய்மையைக் காட்டிலும் சிறந்த பொருளாகத் தாம் இதுவரை எதையும் காணவில்லை என்று உறுதியாகச் சொல்கிறார் வள்ளுவர்,

"யா(ம்)மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்

வாய்மையின் நல்ல பிற" (குறள் - 300)

என்பது பொய்யா மொழி.

ஒருவனுக்குப் புகழைத் தேடித் தருவது பொய்யாமை ஒன்றே. இந்த பண்பு பிற நல்லறங்களையும் அவனுக்குப் பெற்றுத் தந்துவிடும் என்கிறார் வள்ளுவர். இதை,

"பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை

எல்லா அறமும் தரும்" (குறள் - 296)

என்ற குறள் மூலம் விளக்குகிறார். எனவே சத்தியத்தை விட உயர்ந்தது வேறொன்றுமில்லை என்கிறது வள்ளுவம்.

* உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கடலூர்-1.

கைப்பேசி: 9629836995, மின்னஞ்சல்: madeline8101976@gmail.com

## வள்ளுவம் காட்டும் ஒழுக்கம்

மற்ற உயிரினங்களினின்று மனிதன் உயர்ந்து நிற்பது ஒழுக்கத்தால்தான். ஒழுக்கமே மனிதனுக்கு உயர்வைத் தருவதால் மனிதன் தன் உயிரினும் மேலாக ஒழுக்கத்தைப் போற்ற வேண்டும். வாழ்வியலை காட்டும் குறளில் ஒழுக்கமுடைமைக்கு எனத் தனி அதிகாரமே எழுதப்பட்டுள்ளது. அதில் ஒழுக்கத்தின் மாண்பை எடுத்தியம்புகிறது. நல்லொழுக்கமுடையவர் அனைவரும் வாழ்வில் சிறப்பினை அடைவர். ஒழுக்கம் தவறுதலால் அடையத் தகாத பெரும் பழியை அடைவர் என்பதை,

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்

என்றும் இடும்பை தரும்" (குறள் - 138)

என்ற வள்ளுவர் மொழி உறுதி செய்கிறது. நல்லொழுக்கம் உடையவனே மனிதன் எனக் கருதும் தகுதியுடையவன் ஆவான்.

## வெகுளாமை பற்றி வள்ளுவம்

உள்ளத்தில் உள்ள வெறுப்பும் பகையுமே வெகுளியாய் வெளிப்படும். "நீ பகைவன் மீது கொள்ளும் கோபம் அவனை அழிப்பதைக் காட்டிலும் உன்னையே அழித்து விடும்". என்பது சீனப் பழமொழி. "கடவுள் நம்மை எப்பொழுதும் கண்காணிக்கின்றான் என்று உணரும் ஒருவன்தான் சினத்தை விலக்கி வாழ முடியும்" என்று பேரறிஞர் பிளாட்டோ கூறுகிறார். சினத்தை முழுவதும் ஒழிக்க வேண்டும். அச்சினம் நம்மிடம் குடிபுகுந்தால் பாவமும், பழியும் விளையும் துயரங்கள் பெருகும். அதனால்தான் சான்றோர்கள் கோபத்தை அடக்கச் சொல்கிறார்கள்.

சினமென்னும் கொடிய நெருப்பு, தனக்கு இனமானவரை மட்டுமின்றி காவலாக அமைந்த இனம் என்னும் தெப்பத்தையே அழித்து விடும்.

"சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்

ஏமப் புனையைச் சுடும்" (குறள் - 306)

என்று எச்சரிக்கை விடுகிறார் வள்ளுவர். ஒருவன் தான் நினைத்த நன்மைகளை எல்லாம் அடைய விரும்பினால் கோபம் கொள்ளாதிருந்தால் போதும் அனைத்தும் கிட்டும்.

"உள்ளியது எல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்

உள்ளான் வெகுளி எனின்" (குறள் - 309)

என்பது வள்ளுவர் கருத்து. மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்று வழி காட்டியுள்ளது வள்ளுவம்.

## அவையறிந்து பேசுதல்

கற்றார் சபையில் பேசும் பழக்கம் பேச்சுத் திறனை அதிகப்படுத்தும் என்கிறது வள்ளுவம். ஒரு பொருளை எடுத்துச் சொல்லும் போது யாருக்குச் சொல்கின்றோம் என்று ஆராயாமல் பேசுவது கூடாது. அதனால் ஒரு பயனும் இல்லை ஆகையால் நாம் பேசுகின்ற சபையில் உள்ளவர்களின் தரத்தை அறிந்து கொண்டு அதற்கு ஏற்றபடி ஆராய்ந்து பேச வேண்டும்.

"அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்

தோகை அறிந்த தூய்மையவர்" (குறள் - 711)

என்கிறது குறள்.

அறிவு மிக்கவர்களின் முன் தாமும் அறிவு மிகுந்தவர்களாகப் பேச வேண்டும். அறிவு குறைந்தவர்களின் முன் தாம் ஒன்றும் அறியாதவர்கள் போல் இருக்க வேண்டும். கற்றவர்கள் தம்மைப் போல் கற்றவர்களின் கூட்டத்தில் பேசுவது மிகவும் பயனளிக்க வல்லது என்கிறது குறள்.

"கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்

சொல்தெரிதல் வல்லா ரகத்து" (குறள் - 717)

குற்றம் நீங்கச் சொற்களை ஆராய வல்ல அறிஞர்களின் கூட்டத்தில் கற்றறிந்தவர்களின் கல்வி விளக்கம் பெறும் என்கிறது குறள்.

## முடிவுரை

எல்லாப் பொருளையும் தன்னகத்தே தாங்கி நிற்பது குறள் என்னும் கருத்தில் மதுரைத் தமிழ் நாகனார் என்னும் புலவர், திருக்குறளைப் பற்றிச் சிறப்பித்துக் கூறியுள்ளார். எனவே, மனித வாழ்வின் மேன்மைகளை வாழ்வியல் நெறிகளை வகுத்துக் காட்டிய வாழ்வியல் வல்லுநர் வள்ளுவர்தான். வள்ளுவன் வழி வாழ்ந்தால் அது நம் வாழ்வைத் தூய்மையாகவும் வளமாகவும் வைக்கும். நம் பண்பையும் புகழையும் உயர்த்தும். ஆகையினால் உலக மக்களின் உள்ளத்தில் ஒளிந்திருக்கும் இருளை அகற்றும் ஒளி விளக்கு திருக்குறள் ஒன்றாகத் தான் இருக்க முடியும் என ஐயமின்றி உரைக்கலாம்.